# சிந்தனைக்கு ஒரு விருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது வாழ்விலே
நாம் பலவற்றைப்
பார்க்கிறோம்.
பலவற்றைக் கேட்கிறோம்.
பலவற்றைப் படிக்கிறோம்.
அவற்றில் சிலவற்றை உடனேயே
மறந்து விடுகின்றோம். அவற்றுள் சில
காலம் செல்லச் செல்ல நமது நினைவில்
இருந்து தாமாகவே மறைந்து விடுகின்றன.
ஆயினும் சில விஷயங்கள் நமது உள்ளத்தில்
ஆழமாக பதிந்து விடுகின்றன. நமது வாழ்வில்
ஒரு உன்னதமான மாற்றத்தை ஏற்படுத்தி
விடுகின்றன. அவ்வாறு பல்லாயிரக்
கணக்கான மக்களின் வாழ்வில்
ஆனந்தத்தையும் அமைதியையும்
அன்பையும் பொழிய வைத்த
ஒரு அற்புதமான செய்தியை
உங்கள் முன் சிறு கதைகள்
மூலம் எடுத்து வருவதில்
பெரு மகிழ்ச்சி
அடைகின்றேன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தெரு ஓரத்திலே ஒரு குடிசை.
அந்த குடிசையிலே ஒரு ஏழை.
வருவோர் போவோரிடம் அவன் பிச்சை எடுக்கிறான்.
ஆனால் அவனது குடிசையின் கீழ் ஒரு தங்கப்
புதையலே உள்ளது. ஆனால் அவனோ அதனை
அறியாமல் பிச்சை எடுக்கிறான். அவனது குடிசையின்
கீழே தங்கப் புதையல் இருப்பதை அவனுக்கு
சொல்லலாமா? வேண்டாமா?
யார் அந்த ஏழை?
எது அந்தத் தங்கப் புதையல்?



வாருங்கள்
சற்று உள்ளே சென்று பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் சில அடிப்படை விடயங்களைப் பார்ப்போம். ஒரு குழந்தை அழுகின்றது. அக் குழந்தையின் தேவைகளான பசி, தாகம் என்பன நிவர்த்தியாகும் போது அக் குழந்தை மகிழ்ச்சியடைகின்றது. சிரிக்கின்றது. தனது ஆனந்தத்தை வெளிக்காட்டுகின்றது. அந்த ஆனந்தமான நிலைதான் அக்குழந்தைக்கு மிகவும் முக்கியமானதாக விளங்குகின்றது.

குழந்தை வளர வளர அதன் மேல் உலகத்தின் பொறுப்புக்கள் மெதுவாக மெதுவாகச் சுமத்தப்படுகின்றன. இப்போது படிக்க வேண்டும். இப்போது வேலை தேட வேண்டும். இப்போது திருமணம் செய்ய வேண்டும் என ஒன்றன் பின் ஒன்றாகக் கூறப்படுகின்றன. அப்போது ஆனந்தம் என்ற விடயம் சிறிது சிறிதாக பின்னால் தள்ளப்பட்டு எங்கோ ஒரு மூலையில் புதைக்கப்படுகின்றது.

பின்னர் ஒரு நிலையில் உலகம் அவனை ஓய்வெடுக்குமாறு கூறுகின்றது. பார்வை மங்கி விடும். செவிப்புலன் குன்றிவிடும். உடல் தளர்ந்து விடும். இந் நிலையில் நீங்கள் எதனைச் செய்ய விரும்புகின்றீர்களோ அதனை செய்யுங்கள் என உலகம் ஒதுக்கிவிடும். ஆயினும் ஆனந்தமாக இருக்க வேண்டும் என்ற தாகம் நீறு பூத்த நெருப்பாக அவனை வாட்டிக்கொண்டே இருக்கும். ஆண்டாண்டு காலமாக பல சாட்டுக்களைக் கூறி மறைத்து வைத்திருந்த தாகம் வெளிப்பட ஆரம்பிக்கின்றது.

அந்த உள்ளத்தில் ஏற்படும் தாகத்தைத் தணிப்பதற்காக மனிதன் எதையும் செய்யத் தயாராகின்றான். ஆனால் அவனுடைய தாகம் எதனால் தணியும். அந்த தாகத்தை தணிக்கும் தண்ணீர் எங்கே கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடம் தேடி எங்கெல்லாம் அலைகின்றார் " என்று ஒரு பாடல் உள்ளது. அதே போல வீட்டினுள் தொலைத்த ஊசியை, வெளிச்சம் இருக்கிறது என்ற காரணத்திற்காக தெருவிலே தேடினாளாம் ஒருத்தி. இவ்வாறு பல கதைகளும் ஞானிகளின் கூற்றுக்களும் "நாம் வெளியே தேடும் உண்மைப் பொருள் நம் உள்ளேயே உள்ளது" என தெளிவாக கூறுகின்றன. ஆயினும் கஸ்தூரிமான் தனது வயிற்றில் இருக்கும் கஸ்தூரி மணத்தைத் தேடி காடு முழுவதும் அலைவதைப் போல, நாமும் நம் உள்ளே உள்ள இறை உணர்வை உலகெங்கும் தேடுகின்றோம்.

இப்போது ஒரு சிறு கதையைப் பார்ப்போம்.

ஒரு மகாராணி மாடியிலே தனது கூந்தலை உலர்த்திக் கொண்டிருந்தாள். அப்பொழுது அங்கு வந்த காகம் ஒன்று அவளது மினுங்கும் சங்கிலியை எடுத்துக்கொண்டு பறந்து சென்றுவிட்டது. எங்கு தேடியும் அதனைக் காணவில்லை. மகாராணியோ அந்த சங்கிலிதான் வேண்டும் என அடம்பிடிக்க, அரசனும் "சங்கிலியை கண்டுபிடித்து கொடுப்பவர்களுக்கு பாதி இராட்சியம்" என அறிவித்துவிட்டார்.



அப்பொழுது தெரு ஓரம் ரோந்து சென்ற படையினரின் கண்களில் அந்தச் சங்கிலி தென்பட்டது. அதனை ஒரு அழுக்கடைந்த சகதியிலே அவர்கள் கண்டார்கள். பாதி இராட்சியம் கிடைக்கும் என்பதால், உடனே அவர்கள் அந்த சகதியில் இறங்கி தேட ஆரம்பித்தார்கள். ஆனால் அது அவர்களுக்கு கிடைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது அங்கு வந்த படைத் தளபதியும், சகதியில் சங்கிலியைக் கண்டு, அவரும் அதில் இறங்கித் தேட ஆரம்பிக்கின்றார். ஆனால் அவருக்கும் அது கிடைக்கவில்லை. அப்பொழுது அங்கு வந்த அரசனும் சகதியில் சங்கிலியைக் காண்கிறான். பாதி இராட்சியத்தைக் கொடுக்க மனமின்றி, அவனும் அதனுள் இறங்கித் தேடுகின்றான். அப்பொழுது அந்த வழியால் வந்த ஞானி ஒருவர், எல்லோரும் சகதியிலே இருப்பதைக் கண்டு வேடிக்கை பார்க்கிறார். அவர் அரசனிடம் "நீங்கள் அனைவரும் ஏன் சகதியிலே இருக்கிறீர்கள்?" எனக் கேட்க அரசனும் "இது மிகவும் ஒரு புதிராக உள்ளது. மகாராணியின் சங்கிலியை ஒரு காகம் இங்கு போட்டுவிட்டு சென்றுவிட்டது. வெளியில் இருந்து பார்க்கும் பொழுது அது தெரிகிறது. ஆனால் உள்ளே குதித்துப் பார்க்கும் பொழுது, அது மறைந்து விடுகிறது" எனக் கூறுகிறான். ஞானியும் சிரித்து விட்டு அங்குள்ள மரத்தின் கிளையை நோக்கிக் காட்டுகின்றார். அந்த மரத்தின் கிளையில் சங்கிலி தொங்கிக் கொண்டிருந்தது. ஞானியும் "உங்களுக்குச் சங்கிலி தேவை என்றால், மரத்தில் ஏறி சங்கிலியை எடுத்துக் கொள்ளுங்கள். சகதியில் தெரிவது சங்கிலியின் நிழல் மட்டுமே" எனக் கூறிச் செல்கின்றார்.

இது போலவே நாம் தேடும் ஆனந்தமும் நிம்மதியும் பணத்திலோ, பொருளிலோ, புகழிலோ உள்ளன எனத் தேடி ஓடுகின்றோம். ஆனால் அவற்றை அடைந்த பின்னரும் அந்த உள்ளத்தின் தாகம் தணிவதில்லை. வெறும் ஏமாற்றமும், விரக்தியும்தான் மீதமாகின்றன. நாமும் நம் உள்ளே உள்ள ஆனந்தத்தின் விம்பத்தை வெளி உலகில் கண்டு அங்கே தேடுகின்றோம். ஆனால் அந்த ஆனந்தம் உண்மையிலே நம் உள்ளே தான் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பிற்கும், இறப்பிற்கும் இடையே ஓடும் கோடுதான் இந்த வாழ்க்கை. வாழ்விலே தேவைகள் உள்ளன. பசி எடுக்கும்போது உணவு தேவை. களைப்பு ஏற்படும்போது நித்திரை தேவை. தாகம் எடுக்கும் போது தண்ணீர் தேவை. இவ்வாறான உடலின் தேவைகளை எவ்வாறு உணர்ந்து பூர்த்தி செய்கின்றோமோ அவ்வாறே உள்ளத்தில் ஏற்படும் தாகத்தை தணிப்பதும் அவசியமாகின்றது. ஆயினும் உள்ளத்தின் தாகம் உலகத்துப் பொருட்களினால் தணிவதில்லை.

மீண்டும் ஒரு சிறிய கதையைப் பார்ப்போம்

ஒரு இளைஞன் கடவுளிடம் மிகவும் கடுமையாகப் பிரார்த்திருக்கிறான். கடவுளும் அவன்முன் தோன்றி "உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்க, அவனும் தனக்கு நல்ல வேலை வேண்டும் எனக் கேட்கின்றான். நல்ல வேலையும் அவனுக்கு கிடைக்கிறது. சில வருடங்கள் கழிந்த பின்னர் அவன் மீண்டும் பிரார்த்தனை செய்கின்றான். அப்பொழுது கடவுள் அவன்முன் தோன்றி " உனக்கு என்ன வரம் வேண்டும்? " எனக் கேட்க. அவனோ தனக்கு நல்ல மனைவி அமைய வேண்டும் எனக் கேட்கின்றான். அதுவும் அவனுக்கு அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு அவன் வீடு, குழந்தைகள், வேலையில் பதவி உயர்வு என காலத்திற்குக் காலம் கேட்கின்றான். இறுதியாக மிகவும் வயது முதிர்ந்த நிலையில் கடவுளைப் பிரார்த்திக்கின்றான். அப்பொழுது கடவுளும் அவன்முன் தோன்றி "உனக்கு என்ன வரம் வேண்டும்" எனக் கேட்கின்றார். அதற்கு அவன் "இப்பொழுது எனக்கு வயது முதிர்ந்து, உடல் நலம் குன்றி மிகவும் அவஸ்த்தைப்படுகின்றேன். எனக்கு நிம்மதியையும் அமைதியையும் ஆனந்தத்தையும் தாருங்கள்" எனக் கேட்கின்றான். அதற்கு கடவுளும் "இதனை நீ முதல் முறை என்னைச் சந்தித்த பொழுதே கேட்டிருந்தால், அப்பொழுதே உனக்கு அதனைத் தந்திருப்பேனே" எனக் கூறுகின்றார்.

இது ஒரு கற்பனைக் கதையாக இருந்தாலும், நமது வாழ்க்கையுடனும் அது ஒத்து இருப்பது போல தெரிகின்றதல்லவா. நமக்குத் தேவையான அந்த நிம்மதியையும், ஆனந்தத்தையும் வெளியில் தேடுகின்றோம். ஆனால் அவை வெளிப் பொருட்களில் தங்கி இருப்பதில்லை என்பதை இறுதியில் தான் அறிகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறப்பும், பிறப்பும் இயற்கையின் நியதி என்பதனை நாம் பல தடவைகள் கேட்டிருக்கின்றோம். அதனை கண்கூடாகப் பார்த்திருக்கின்றோம். ஆனாலும் அதனை நாம் உண்மையிலே உணர்வதில்லை. ஆனந்தமாக இருக்க வேண்டும், நிம்மதியை உணர வேண்டும், உண்மையான ஆண்டவனை உணர வேண்டும் என்றெல்லாம் பல விருப்பங்கள் நமக்கு உள்ளன. ஆயினும் அவற்றை நாளை செய்யலாம் என தள்ளி வைத்து விடுகின்றோம். ஆனால் அவ்வாறான ஒரு நாள் வரும் போது, அடுத்த மூச்சிற்காக நாம் தத்தளிக்கும் போது, இந்த மூச்சின் மகிமையை, இந்த வாழ்வின் அற்புதத்தை நாம் புரிந்து கொள்வோம். ஆனால் அதனை இப்பொழுதே புரிந்து கொள்வோமாயின் அளப்பரிய ஆனந்தத்தை நமது வாழ்வில் சாத்தியமாக்கலாம்.

இதற்கும் ஒரு கதை உள்ளது.
அதனை இப்பொழுது பார்ப்போம்.

ஒரு வியாபாரி இருந்தான். ஒருநாள் அவனது கதவில்



யாரோ தட்டும் சத்தம் கேட்டது. திறந்து பார்த்தால் ஒரு முதியவர் நின்று கொண்டிருந்தார். அவர் அந்த வியாபாரியிடம் ஒரு கல்லைக் கொடுத்து "இந்த அற்புதக் கல்லினால் நீ எந்த உலோகத்தைத் தொட்டாலும் அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னாக மாறிவிடும். நீ விரும்பியளவு இதனை உபயோகிக்கலாம். ஆனால் ஒரு நிபந்தனை. நான் குறிப்பிட்ட ஒரு நாளில் குறிப்பிட்ட மணிநேரத்திற்கு மீண்டும் வந்து அதனை உன்னிடமிருந்து மீண்டும் எடுத்துச் செல்வேன்" என்று கூறிச் சென்றுவிட்டார் வியாபாரிக்கு மட்டற்ற மகிழ்ச்சி. உள்ளே சென்று உலோகத்தினால் ஆன பொருட்களைத்தேட ஆரம்பித்தான். அவன் வாழ்க்கை முழுவதும் கருமியாக இருந்ததால், அவனது தராசு கூடத் தோலினால் செய்யப்பட்டதாகவே இருந்தது. எனவே சந்தையில் உலோகத்தின் விலையை விசாரித்தான். அன்று சந்தையில் உலோகத்தின் விலை சற்று உயர்ந்திருந்தது. அவனும் சரி உலோகத்தின் விலை இறங்கட்டும் எனக் காத்திருந்தான். இவ்வாறே தினமும் உலோகத்தின் விலை ஏறிக்கொண்டே சென்றது. அவனும் விலை இறங்கும் எனக் காத்திருந்தான். பாருங்கள் !

இவன் உலோகத்தை தங்கமாக்கக் கூடிய கல்லை வைத்திருக்கிறான். ஆயினும் உலோகத்தின் விலை குறையவேண்டும் எனக் காத்திருக்கிறான்.

ஒருநாள் மீண்டும் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. திறந்து பார்த்தால் அதே முதியவர் நின்று கொண்டிருந்தார். " எனது கல்லை மீண்டும் தரவேண்டும்" என்றார். வியாபாரியோ அங்கும் இங்கும் ஓடி, உலோகத்தினால் ஆன பொருள் ஏதாவது இருக்குமா எனத் தேடினான். ஆனால் அந்த முதியவரோ "இல்லை இப்பொழுதே அதனைத் தரவேண்டும் " என அந்தக் கல்லை வாங்கிச் சென்று விட்டார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நமக்கும் இந்த மூச்சு எனும் அற்புதமான பொக்கிஷம் தரப்பட்டுள்ளது. இந்த வாழ்வை வளமாக்கக் கூடிய, ஆனந்தத்தால் இந்த வாழ்வை நிரப்பக்கூடிய சாத்தியம் உள்ளது. ஆனால் அதனை நாம் உபயோகப்படுத்தவில்லை என்றால், அந்த வியாபாரி போலவே அருமையான சந்தர்ப்பம் நமது கைகளையும் நழுவிச் சென்றுவிடும்.

இதுவரை நாம் பார்த்ததில் இருந்து இந்த மனித வாழ்க்கை மிகவும் குறுகியதென்றும், நாம் ஆனந்தத்தைப் பல இடங்களில் தேடினாலும் அது உண்மையில் நம் உள்ளேதான் உள்ளது என்றும் அறிந்தும் கொண்டோம்.

இப்பொழுது ஆரம்பத்தில் ஏற்பட்ட கேள்விகளுக்கு ஓரளவு பதில் கிடைத்திருக்கும் என நம்புகின்றேன். நம்முள்ளே அந்த ஆனந்தத்தின் பொக்கிஷம் புதைந்துள்ளது. ஆனால் நாமும் அந்த ஏழை மனிதன் போன்று அதனை வெளியே தேடுகின்றோம்.

சரி,அந்தப் பொக்கிஷம் உள்ளே உள்ளது என்றால், அது மிகவும் மகிழ்ச்சியான விடயம் தான். ஆனால் அதை எவ்வாறு அடைவது என்பது மிகப் பெரிய கேள்வியாக உள்ளது. இங்கு தான் அதனை நமக்கு எடுத்துத் தரக் கூடிய ஒரு ஆசானின் தேவை ஏற்படுகிறது. வெறும் பேச்சளவில் மட்டுமன்றி, நாம் அதனை அனுபவிப்பதற்கு உதவுபவராக இருக்க வேண்டும்.

ஆசான் என்பவர் எப்படி இருக்க வேண்டும் என்று பார்ப்போம். சிலர் எனது காலைச் சரி செய்யுங்கள், எனது நோயைத் தீர்த்து வையுங்கள், அப்பொழுது நான் உங்களை ஆசானாக ஏற்றுக் கொள்கிறேன் என்பார்கள். டாக்டர்கள் வேறு என்னதான் செய்கிறார்கள், காலைச் சரி செய்கிறார்கள். நோயைக் குணமாக்குகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் எல்லோரும் ஆசான்களா? தண்ணீர் மேலே நடந்து காட்டுங்கள். அப்பொழுது நான் உங்களை ஆசானாக ஏற்றுக் கொள்கிறேன் எனபார்கள். குளத்தில் தண்ணீர் மீது நடந்து செல்லும் பூச்சி உள்ளது. அதனை ஆசான் என ஏற்றுக் கொள்வீர்களா? தண்ணீரை பாலாக மாற்றிக் காட்டுங்கள் அப்பொழுது நான் உங்களை ஆசானாக ஏற்றுக்கொள்கிறேன் என்பார்கள். பசு வேறு என்ன செய்கிறது? பசும்புல்லை உண்கிறது. வெள்ளைப் பாலைக் கொடுக்கின்றது.

எனவே அவை அல்ல ஆசானைக் கண்டு அறிவதற்கான வழிகள். யார் ஒருவர் நம்மை நாம் உணர்வதற்கான வழியைக் காண்பித்து தருகின்றாரோ அவரையே நாம் உண்மையான ஆசான் எனக் கூறலாம். வெறுமனே பேச்சளவில் இல்லாமல், உண்மையிலே அந்த உள் உணர்வை நாம் அனுபவிப்பதற்கான வழியைக் காட்டித் தரவல்லவராக இருக்க வேண்டும்.

சரி அந்த அனுபவம் நம் உள்ளே உள்ளது என்றும், அதனைக் காட்டித் தரவல்ல ஆசானைக் கண்டு கொள்வது எவ்வாறு என்றும் அறிந்து கொண்டோம். இப்பொழுது எது நம்மைத் தேட வைக்கின்றது எனப் பார்ப்போம். அதுதான் தாகம். எவ்வாறு தாகம் நம்மை தண்ணீர் வரை எடுத்துச் செல்கிறதோ, பசி நம்மை உணவுவரை எடுத்துச்செல்கிறதோ, அதுபோலவே நம் உள்ளத்தில் உள்ள தாகம் நம்மை அந்த ஆனந்தத்தை, நிம்மதியை நோக்கி எடுத்துச் செல்கிறது.

இந்த உலகத்தில் எத்தனையோ பேர், எத்தனையோ விடயங்கள் பற்றிக் கூறுகின்றார்கள். ஆனால் எது நமக்கு பரமானந்தத்தையும், நிம்மதியையும் தரும் என நாம் எண்ணலாம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது ஒரு உதாரணத்தைப் பார்ப்போம்.

ஒரு மேடையில் ஐந்து பேர் இருக்கிறார்கள் என வைத்துக் கொள்வோம். ஒருவர் உருளைக்கிழங்கு வறுவல் இலவசமாகக் கொடுக்கின்றார். மற்றொருவர் மெழுகுவர்த்தியையும் நெருப்புப் பெட்டியையும் கொடுக்கின்றார். இன்னொருவர் கைக்குட்டையைக் கொடுக்கின்றார். இன்னொருவர் விசிறியைக் கொடுக்கின்றார். மற்றொருவர் தண்ணீர் கொடுக்கின்றார்.

இப்பொழுது நீங்கள் இருட்டான அறைக்குச் செல்ல வேண்டும் என்றால் யாரிடம் போவீர்கள்? விசிறி வைத்திருப்பவரிடமா? கைக்குட்டை வைத்திருப்பவரிடமா? அல்லது மெழுகுவர்த்தியும், தீப்பெட்டியும் வைத்திருப்பவரிடமா? யாரிடம் செல்வீர்கள்? நான் மெழுகுவர்த்தியும், தீப்பெட்டியும் வைத்திருப்பவரிடம் தான் செல்வேன். இது எளிமையானது. இல்லையா? இதனைத்தான் தினமும் செய்கின்றீர்கள். உங்களுக்கு தாகம் எடுத்தால் யாரிடம் போவீர்கள். தண்ணீர் வைத்திருப்பவரிடம் தான் போவீர்கள். இது சிக்கலானதா? இல்லை.

இது புரிந்துகொள்ளக் கூடியதொன்றல்லவா? இதில் ஏதாவது குழப்பம், சந்தேகம் உண்டா? இல்லை. இது மிகவும் எளிமையானது.

நிறையப்பேர் நிறைய விடயங்களைக் கற்றுக் கொடுக்கின்றார்கள். சில ஆசிரியர்கள் பியானோ வாசிக்கக் கற்பிக்கின்றார்கள். சிலர் கத்திச் சண்டை கற்றுக் கொடுக்கின்றார்கள். சிலர் நடனமாடக் கற்றுக் கொடுக்கின்றார்கள். நீங்கள் நடனம் கற்க விரும்பினால் நடனம் கற்பிக்கும் ஆசிரியரிடம் செல்ல வேண்டும். பியானோ வாசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும் என்றால் பியானோ ஆசிரியரிடம் செல்ல வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது போல நீங்கள் உங்களின் உள்ளே செல்ல விரும்பினால், உள்ளே செல்லும் வழியைக் காட்டிக் கொடுக்கும் ஆசானிடம் செல்ல வேண்டும். இது மிகவும் எளிமையானது. உங்களுக்கு ஆனந்தம் வேண்டுமா? எப்போதெல்லாம் வேண்டுமோ அப்பொழுதெல்லாம் அனுபவிக்கலாம். ஏனென்றால் அது உங்களுக்குள்ளேயே இருக்கிறது.

இந்தத் தருணத்தில் நான் மகராஜி எனும் கௌரவப் பெயரால் அழைக்கப்படும் ப்ரேம் ராவத் என்பவரை அறிமுகம் செய்து வைக்க விரும்புகிறேன். தனது மூன்றாவது வயதில் மக்கள் முன் உரையாற்ற ஆரம்பித்ததில் இருந்து இன்றுவரை 40 வருடங்களுக்கு மேலாக, அவர் உலகம் முழுவதும் பிரயாணம் செய்து மக்களுக்கு ஒரு எளிமையான ஆனால் ஆழமான செய்தியை வழங்கிவருகிறார். நீங்கள் எதனைத் தேடுகிறீர்களோ அது உங்கள் உள்ளேயே உள்ளது. நீங்கள் வெளியே தேடும் ஆனந்தம், நிம்மதி எல்லாம் ஏற்கனவே உங்களின் உள்ளேயே உள்ளது. அதனை நீங்கள் அனுபவிக்க விரும்பினால் தன்னால் உங்களுக்கு உதவமுடியும் என்கிறார் மகராஜி.

மகராஜியின் செய்தி சொற்களைவிட மேலானது. யார் தமது வாழ்வில் அந்த பரமானந்தத்தை அனுபவிக்க விரும்புகிறார்களோ அவர்களுக்கு மகராஜி நான்கு வழிமுறைகளை வழங்குகிறார். அதனை அவர் ஞானவழிமுறை என அழைக்கிறார்.

ஞானவழியைப் பெற விரும்புபவர்கள் அதற்கு தம்மைத் தயார் செய்வதற்காக மகராஜி திறவுகோல்கள் எனும் டிவீடிக்களின் தொகுப்பினை உருவாக்கி உள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகராஜி மற்றும் அவர் வழங்கும் ஞானவழிமுறை பற்றி மேலும் அறிந்து கொள்ள விரும்புபவர்கள், இந்தப் புத்தகத்தில் உள்ள தொலைபேசி எண் உடன் தொடர்பு கொண்டு, எவ்வாறு நீங்கள் திறவுகோல்கள் எனும் டீவீடி தொகுப்பினைப் பெற்று ஞானவழிமுறைக்கு தயார் செய்யலாம் எனும் தகவல்களை அறிந்துகொள்ளலாம்.

அனுபவத்தின் அவசியம்

ஒரு இடத்தில் " தண்ணீர் பந்தல் " என்று பலகையில் பெரிதாக எழுதப்பட்டுள்ளது. ஆனால் அங்கே கொடுப்பதற்கு தண்ணீர் இல்லை என்றால் அதனால் என்ன பிரயோசனம்? அங்கு தண்ணீரைப்பற்றி ஒருவரால் பேச முடியும். ஆனால் தாகம் உள்ளவனுக்கு தண்ணீர் கொடுக்க முடியாது. இது ஒரு பெரிய வித்தியாசம். இன்னொரு முறையில் பார்த்தால், ஒரு உணவகத்திற்குச் செல்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். அங்கு உணவு இருந்தால் வேறு விடயங்கள் பற்றி பேசுவதற்கோ விவாதிப்பதற்கோ அவசியம் இல்லை. பசியாக உள்ளவர்கள் அங்கு வந்து வயிறார உண்டு மகிழலாம். பெரிதாக " உணவகம் " என்று எழுதப்பட்டுள்ளது. ஆனால் அங்கு பரிமாறுவதற்கு உணவு இல்லை என்றால், அங்கு பல விடயங்கள் பேசப்படும். ஆனால் உணவு கிடைக்காது.

இங்கு விடயம் அனுபவத்தைப் பற்றியது. கடவுளைப்பற்றி உரையாடுவது இலகு. ஆனால் கடவுளை, அந்த சக்தியை, நம்முள்ளே உள்ள கடவுளை உணரவைப்பது கடினம். யாரிடம் ஞானவழிமுறை இல்லையோ, அவர்கள் பெரிய பெரிய கதைகள் கூறலாம், விவாதிக்கலாம். ஆனால் அந்த உணர்வை அனுபவிக்க வைக்க முடியாது. யாரால் அதனை அனுபவிக்க வைக்க முடியுமோ, அங்கு விடயம் முற்றிலும் வேறுபட்டதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒரு புல்லாங்குழல் வித்துவான் மிகவும் அழகாக இனிமையான இசையை வழங்கிக் கொண்டிருந்தார். அவரது இசை பலரையும் ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்தியது. அவர் புல்லாங்குழல் வாசிப்பது, பார்பதற்கு மிகவும் எளிமையாகவும் இலகுவாகவும் தெரிந்தது. அடே, இது என்ன பெரிய விசயம் என்று எண்ணி, ஒரு மனிதன் தானும் ஒரு புல்லாங்குழலை எடுத்து வாசிக்க ஆரம்பித்தான். ஆனால் அங்கே பூ, பூ என்று காற்றுத்தான் வந்ததே அன்றி இசையுடன் சேர்ந்த அற்புதமான ஒலி ஒன்றும் வரவே இல்லை. அந்த மனிதனும் வித்துவானிடம் சென்று, எனது புல்லாங்குழல் சரியாக இல்லை, தயவு செய்து உங்களது புல்லாங்குழலை எனக்குத் தாருங்கள் என்று கூறினான். அதற்கு அந்த வித்துவான் சிரித்து விட்டு புல்லாங்குழல் நன்றாகத்தான் உள்ளது. ஆனால் நீ அதனைக் கையாளும் முறைதான் சரியாக இல்லை என்று கூறிவிட்டு, புல்லாங்குழலை அவனது வாயில் வைத்து சிறிது அசைத்த பொழுது அங்கு ஒலி ஏற்படத் தொடங்கியது. தினமும் இதனைப் பயிற்சி செய்தால் நீயும் இந்தப் புல்லாங்குழலில் இருந்து இனிமையான இசையை அனுபவிக்கலாம் என்று கூறினார். நாமும், நமது உள்ளத்தில் உள்ள ஆனந்தத்தை அனுபவிக்கும் வழியை அறிந்து, பயிற்சி செய்தால், நமது வாழ்விலும் ஆனந்த மழை பொழியமுடியும். ஞானிகளும் மகான்களும் இந்த மனிதப்பிறப்பு மோட்சத்தின் கதவு என்றும், மானிடராகப் பிறத்தல் மிகவும் அரியது என்றும் கூறிச் சென்றுள்ளார்கள். இந்த உயிர் இல்லாவிட்டால், இந்த மூச்சு போய்விட்டால், இது இசைமீட்ட முடியாத, நரம்பில்லாத இசைக் கருவிபோல் ஆகிவிடும். உங்கள் வாழ்வில் அமைதி வேண்டுமென்றால், உங்களிடமிருந்தே ஏன் அதை தேடத் தொடங்கக் கூடாது? உங்கள் உள்ளம் உங்களிடம் கூற விரும்புவதை ஏன் புரிந்துகொள்ளக் கூடாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் எல்லா இடமும் நீக்கமற நிறைந்துள்ளார் என கூறுவது மிகவும் சுலபம். ஆனால் உள்ளத்திலே வீற்றிருக்கும் கடவுளை உணர வைப்பது மிகவும் எளிதான காரியம் இல்லை. ஆனால் மனிதனைப் பொறுத்த வரையில் எதுவரை அவன் அதனை அனுபவிக்கவில்லையோ, அதுவரை ஒன்றுமே நிறைவாக இருக்காது. ஒரு விடயத்தைப்பற்றி படிப்பதால், எழுதுவதால் நாம் அதனை கொள்கையளவில் அறிந்து கொள்ளலாம் ஆனால் அதன் மூலம் அனுபவம் ஏற்படாது.

நீங்கள் சைக்கிள் ஓடக் கற்றுகொள்ள வேண்டும் என்றால் மணிக்கணக்காக எவ்வாறு பெடலை அழுத்த வேண்டும், எவ்வாறு நேரே பார்க்க வேண்டும் என்றெல்லாம் கேட்டு அறியமுடியும். ஆனால் நீங்கள் ஒரு சைக்கிளில் ஏறி அமர்ந்து அதனை ஓட முயற்சிக்காத வரை அது எவ்வாறு இருக்கும் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளமாட்டீர்கள். இந்த மூச்சு வந்து போகும் வரை நீங்கள் மனிதனாக இருப்பீர்கள். மனிதன் என்ற ரீதியில் நீங்கள் பல விடயங்களை செய்யலாம். ஆனால் நீங்கள் மேலும் ஒரு விடயத்தை நிட்சயம் செய்ய முடியும். அதுதான் உங்களின் உள்ளத்தில் வீற்றிருக்கும், வல்லமை பொருந்திய, எல்லோருக்கும் பொதுவாக விளங்கும், எல்லையில்லாத உண்மைப் பொருளை அனுபவம் செய்ய முடியும்.
இந்த புத்தியினால் விளங்க முடியாததை நீங்கள் அறிந்து கொள்ள முடியும். எப்பொழுது நீங்கள் அந்த பொருளை அனுபவம் செய்கிறீர்களோ, அன்று உங்கள் வாழ்வு பயனுள்ளதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உங்கள் உள்ளம் உங்களிடம் கூற விரும்புவதை ஏன்
புரிந்துகொள்ளக் கூடாது? உங்கள் வாழ்வில் அமைதியை
உணர்ந்து, நிறைவுடன் வாழ்வதற்கு எது தேவையோ
அதைச் செய்யுங்கள். அமைதியைத் தேடி கண்டு
கொள்ளுங்கள். அதை அனுபவியுங்கள்.
மகராஜி உள்ளத்தில் உள்ள உண்மைப் பொருளைப்
பற்றி பேசுகின்றார். அவர் அதனை அனுபவித்ததன்
காரணத்தால் அது பற்றி பேசுகின்றார்.
அத்துடன் மக்கள் அந்த உண்மைப் பொருளை
அனுபவிக்க உதவுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைக்கு ஒரு விருந்து

ஒரு ஆழமான கருத்தை மக்கள் தெளிவாகவும் இலகுவாகவும் புரிந்து கொள்வதற்காக, காலம் காலமாக கவிதைகள், பாடல்கள், கதைகள் என்பன பாவனையில் இருந்து வந்துள்ளன. அவை புரிந்துகொள்வதற்கு கடினமான விடயங்களை இலகுவாக்கி, மக்களின் உள்ளத்தை தொட்டுள்ளன. தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்த இன்றைய காலகட்டத்தில் மிகவும் பழமைவாய்ந்த, ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் நிறைந்துள்ள ஆனந்தம், அமைதி பற்றிய ஒரு அழகான செய்தியை சிறு கதைகள் மூலம் உங்கள் முன் கொண்டு வருவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். " யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் " எனும் வாசகத்திற்கு ஏற்ப ஒவ்வொரு மனிதனும் தமது வாழ்வில் ஆனந்தத்தையும் அமைதியையும் பெற்று வாழவேண்டும் எனும் உயர்ந்த நோக்கத்துடன் இப் புத்தகத்தை உங்கள் முன் வைக்கிறோம்.

மேலதிக விபரங்களை
பெற விரும்பினால்
www.mspeaks.com
www.contactinfo.net
www.wordsofpeace Global.org
www.wordsofpeacetamil.com
எனும் இணைய தளத்தில் உங்களது நகரத்திற்கான தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.
மேலதிக தொடர்புகளுக்கு
கனடா (416) 431 5000.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org